*Available online at:* http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
*IJMASRI, Vol. 3, issue 1, pp. 410- 414, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

RESEARCH ARTICLE

# வரலாற்றின் பார்வையில் திருக்கோயிலூர்

**மஞ்சுளா. அ**
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், வரலாற்றுத்துறை, அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்*

*ஆய்வுச் சுருக்கம்*

*வரலாற்றுப் பெருமைக்கு உரியதான இந்த நகரம் மேலூர், கீழூர் (கீழையூர்) என்னும் இரு பிரிவினதாயுள்ளது. திருக்கோவலூரில் மேற்குப்பகுதி மேலூராகும். இதுதான் நகரத்தின் இன்றியமையாப் பகுதி. இங்கே தான் திருவிக்கிரமப் பெருமாள் கோயில், கடைத்தெரு, உயர் நிலைப்பள்ளி முதலியவை உள்ளன. இங்கே உள்ள திருவிக்கிரமப் பெருமாள் கோயில் வரலாற்றுச் சிறப்பு மிக்கது; முதலாழ்வார் மூவரும் சேர்ந்து வழிபட்டது. திருமங்கையாழ்வாரின் பாடல் (மங்களா சாசனம்) பெற்றது. திருக்கோவலூரரின் கிழக்குப்பகுதி கீழூர் ஆகும். இது கீழையூர், கீழவூர் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தக் கீழூர்ப் பகுதியில்தான் வீரட்டேஸ்வரர் கோயில் சிவன் கோயில் இருக்கிறது. சிவபெருமான் வீரச் செயல்கள் நிகழ்த்திய எட்டுத் திருப்பதிகளுள் (அட்ட வீரட்டங்களுள்) இந்த ஊரும் ஒன்று.*

**குறிச்சொற்கள்:** *பாரி, ஔவையார், பரணன், கபிலர்குன்று*

## முன்னுரை

*தமிழ்நாடு பண்டைக் காலத்தில் சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்களால் ஆளப்பெற்றது. மேலும், இம்மாநிலம் பல கோயில்களையும், சிற்பங்களையும் பெற்ற கலை அம்சம் கொண்ட பகுதியாக விளங்குகிறது. சங்க சமூகத்தினாலும் ஏனைய விடயங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இக்கால தமிழ் அரசர்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் அவர்களின் அரசின் நகர் மத்தி மற்றும் ஆற்றுப்படுக்கையிலிருந்தும் கண்டுபிடிக்கப்பட்டன. பல நாணயங்கள் அவற்றின் பின்புறத்தில் அரச சின்னத்தைக் கொண்டிருந்தன. சேரர் சின்னமான அம்பும் வில்லும் போன்றன சின்னங்கள் குறிப்பிடத்தக்கன. சில உருவப்படத்தையும் எழுத்துப் பொறிப்பையும் கொண்டிருந்ததன் மூலம் நாணய ஆய்வியலாளர்கள் அதன் காலத்தைக் கண்டுபிடிக்க உதவின. பண்டைய தமிழ்நாடு மூவேந்தர்களால் ஆளும் பகுதிகளைக் கொண்டிருந்தது. அவர்கள் வேந்தர் என்று அழைக்கப்பட்டனர். மேலும் ஆங்காங்கே பல பழங்குடித் தலைவர்கள் குறுநில மன்னர்களாக ஆண்டுவந்தனர். அவர்கள் வேள் அல்லது வேளிர் என்று அழைக்கப்பட்டனர். உள்ளூர் அளவில் இன்னும் கீழ்நிலையில் கிழார் அல்லது மன்னர் என்று அழைக்கப்படும் குலத்தலைவர்கள் இருந்தனர். சங்ககால தமிழ் வரலாற்றில் திருக்கோவிலூர் மிகச்சிறந்த இடத்தை பிடித்துள்ளது மலையமான்களும் அதியர் வம்சத்தினரும் ஆட்சி செய்த இந்த திருக்கோவிலூர் தமிழக வரலாற்றில் மிக சிறப்பு வாய்ந்த இடத்தை பெற்றிருக்கிறது. அங்கு கிடைக்கக்கூடிய தொல்பொருள்*

சான்றுகளும் இலக்கியங்களில் திருக்கோவிலூரை பற்றிய குறிப்புகளும் அதன் சிறப்பை உணர்த்துகிறது.

**பாடியந்தல் பாறை ஓவியங்கள்**

பாடியந்தல் பாறை ஓவியங்கள் என்பது இந்தியாவின் தமிழ்நாடு மாநிலம், கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோயிலூர் வட்டத்தில் உள்ள பாடியந்தல் கிராமத்தின் அருகே அமைந்துள்ள குகையில் தீட்டப்பட்டுள்ள பாறை ஓவியங்களைக் குறிக்கும். பாடியந்தல் பாறை ஓவிய குகைத்தளம், சோழவாண்டிபுரம் ஆண்டிமலை சமணர் குகைத்தளத்தின் பின்னே அமைந்துள்ளது. உள்ளூர் மக்கள் இக்குகையினை "இருளன் கல்" என்று அழைக்கிறார்கள். குகையின் கூரையில், குதிரை, வில் மற்றும் அம்பு போன்ற பழங்கால ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இங்கு மான்தோல் போன்ற வடிவத்தில் ஒரு விரிப்பு சிறப்பாகத் தீட்டப்பட்டுள்ளது. தரை விரிப்பு குறித்து வரையப்பட்ட பாறை ஓவியம் இங்கு மட்டுமே காணக்கிடைக்கிறது. கூரை மற்றும் பக்கவாட்டுச் சுவர்களில் குறியீட்டு ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன

**திருக்கோயிலூர்**

தற்போது விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டமாக இருக்கின்ற திருக்கோயில் அப்போது மலையமான்களும் அதே வம்சத்தினரும் ஆட்சி செய்த பகுதியாக இருந்திருக்கிறது. மலாடு, இன்றைய கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர், சங்கராபுரம், விழுப்புரம், உளுந்தூர் பேட்டை பகுதிகளையும் கல்வராயன் மலைப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருந்திருக்கிறது எனலாம். ஓய்மாநாடு கடற்கரைப்பகுதியை அடுத்த புதுச்சேரி, திண்டிவனம், செஞ்சி ஆகிய பகுதிகளைத் தன்னகத்தே கொண்டிருந்திருக்கிறது என்று கூறலாம். மலையமான் நாட்டின் தலைநகராக திருக்கோவலூர் இருந்திருக்கிறது. இப்போது, திருக்கோயிலூர் என்றும் திருக்கோவிலூர் என்றும் அழைக்கப்படும் இவ் ஊர், கழக இலக்கியங்களிலும், தேவாரத் திருப்பதிகங்களிலும் திருக்கோவலூர், கோவல் நகர், கோவல் என்று குறிக்கப் பட்டுள்ளதைக் காண்கிறோம். மலையமான் நாட்டில் பல ஊர்கள் சிறப்புடையனவாக இருந்தன. கோவலூர்த் தென்பெண்ணை யாற்றின் தென்மேற்கில் இருந்ததாகக் கருதப்படும் பாதுகாப்பான முள்ளூர்க்குத் தலைவர் மலையமான் திருமுடிக்காரியாவார்.

திருமுடிக்காரி என்பவன் ஒரு சிற்றரசன் இவன் மலையமான் திருமுடிக்காரி எனவும், மலையமான் எனவும் அழைக்கப்படுபவன். இவன் சான்றோருடைத்துத் தொண்டை நாடு எனச் சாற்றப்பெறும் பெருமை பெற்ற தொண்டை நாட்டிற்கும், சோழவளநாடு சோறுடைத்து என்று சொல்லப்படும் சோழ வளநாட்டிற்கும் இடைப்பட்ட நடு நாட்டில் மலாடு என்னும் நாட்டின் அரசன் ஆவான் இம்மலாடு பெண்ணையாற்றங்கரையில் உள்ளது இவன் மலயமா நாட்டிற்கு மன்னனாக இருந்து திருக்கோவலூரைத் தன் நாட்டுத் தலைநகராகக்கொண்டு செங்கோல் செலுத்திவந்தான். இவனுக்குரிய மலை முள்ளூர் மலையாகும். இவன் சிற்றரசனேயாயினும் போர்முகத்தில் நின்று புறமுதுகுகாட்டாது போரிடும் ஆற்றல் மிகப் படைத்தவன். சேரமான் மாந்தரலம் சேரல் இரும்பொறையும், சோழன் இராசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருதவழி சோழற்குத் துப்பாகிய தேர்வண் மலையனைப் பாடிய பாட்டும் புறநானூற்றில் உள்ளது. அதனை வட வண்ணக்கன் பெருஞ்சித்திரனார் பாடியுள்ளார். இப்போரிற் சோழனே வென்றான். இவனை யார் துணையாகக் கொள்கின்றனரோ, அவர்கள் வெற்றி பெறுதல் திண்ணம். அதில் யாதோர் ஐயமும் இன்று. இதன் பொருட்டே மூவேந்தர்களும், சமயம் வந்தபோதெல்லாம் இவன் துணை வேண்டி நின்றனர். இதனைக் கபிலர் அழகு படக் கூறுகையில், " வீயாத் திருவின் விறல்கெழு தானை மூவருள் ஒருவன் துப்பாகியன்," என்றும் "முரண் கொள் துப்பின் மலையன்," என்றும் புகழ்ந்தனர். இவன் வன்மையுடையவன் என்னும் பொருளில் தான் துப்பின் மலையன், துப்பாகியன் எனவும் சிறப்பிக்கப்பட்டனன். இவனது வீரத்திற்கு அஞ்சி ஓடிய வீரரும் உளர். ஒருமுறை ஆசிரியர் இவனது முள்ளூர் மலையை நெருங்கிப் போரிட்டபோது, அவர்களுக்கு இடையில் புல்வாய்கட்கிடையே புலிக்குட்டி புகுவது போலப் புகுந்து இவன் தன் வாளினை உறை கழித்து வீசி நின்றபோது, அவர்கள் இரிந்து ஓடினர் என்பதை நற்றிணை, "ஆரியர் துவன்றிய பேர் இசை முள்ளூர்ப் பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது ஒரு வேற்கு ஓடியது" எனக் கூறுகிறது.

**காரியும் கபிலரும் கல்வெட்டும்**

கபிலருக்கு மலையமான் திருமுடிக்காரியுடன் நற்றொடர்பு இருந்தது. பறம்புமலை மன்னனான வள்ளல் பாரி மூவேந்தருடனான போரில் இறந்த பிறகு, பாரி மளரிர்க்கு மணமுடிக்கும் பொறுப்பைப் புலவர் கபிலர் ஏற்கிறார். ஆனால், மூவேந்தர்க்கும் அஞ்சி,

பாரிமகளிரைச் சிற்றரசர் யாரும் மணம் புரிந்து கொள்ள முன்வரவில்லை. திருக்கோவலூர்த் தெய்வீகன் பாரிமகளிரை மணந்ததாக மரபுவழிக் கதைகள் கூறப்படுவதால், கபிலர் காலத்தவரான மலையமான் திருமுடிக்காரி இதற்கு துணையிருந்திருப்பதாக எண்ணலாம். பாரி மகளிரை ஔவையாரோடு தொடர்பு படுத்திச் சொல்வதற்கும், திருமுடிக்காரியே பாரிமகளிரை மணந்ததாகச் சொல்வதற்கும் அடிப்படைச் சான்றெதுவும் இல்லை என்க. திருக்கோவலூரில் உள்ள கீழையூர் வீரட்டானேசுவரர் கோயிலில் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட முதலாம் இராசராசனின் கல்வெட்டு உள்ளது. அதில், கபிலர் அங்கு வந்து மலையமானிடம் பாரியின் பெண்களை அடைக்கலப் படுத்திவிட்டு, அங்கு (கீழையூர் பெண்ணையாற்றுத் துறைக் கருகில் ஆற்றிலுள்ள) கல்லொன்றில் தீ வளர்த்து உயிர் நீத்தார் என்ற செய்தி கீழ்க்காணுமாறு குறிக்கப்பட்டுள்ளது

*தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்*
*மூரிவண் தடக்கை பாரிதன டைக்கலப்*
*பெண்ணை மலையற் குதவிப் பெண்ணை*
*அலைபுனல் அழுவத்து அந்தரிட்சம்செல*
*மினல்புகும் விசும்பின் வீடு பேறெண்ணி*
*கனல்புகும் கபிலக் கல்லது.*

இன்றும் அங்குப் பெண்ணையாற்றில் ஒரு சிறு குன்றும், குன்றின்மேல் ஏறிச் செல்ல படிக்கட்டுகளும் குன்றின் மேலே, கோயில் போன்ற அமைப்பும் அக் கோயிலைச் சுற்றிவர வழியும் உள்ளதைக் காணலாம். இதனை ஊர் மக்கள் ‘கபிலர் குன்று’ என்றும் ‘கபிலக் கல்’ என்றும் கூறுகின்றனர். இக் குன்றை இடைச்சி ஒருவரின் கதையோடு தொடர்பு படுத்தி, ‘இடைச்சிக் குன்று’ என்றும் அழைக்கின்றனர்.

**மெய்ப்பொருள் நாயனார்**

மெய்ப்பொருள் நாயனார் திருக்கோவலூரில் வாழ்ந்த மன்னர் ஆவார். அடியார்கள் திருநீறு பூசி, உருத்திராட்ச மாலை அணிந்து காட்சி தரும் திருவேடத்தையே மெய்ப்பொருள் (உண்மைக் காட்சி உண்மைப் பொருள்) எனக் கொண்டவர். இதனால் மெய்ப்பொருள் நாயனார் என்று அழைக்கப்பட்டார். இவர் மலையமான் குலத்தில் தோன்றியவர். பகைவர்களை வென்று நாட்டுக்கு நன்மை செய்பவர். சிவன் அடியார்களின் கருத்து அறிந்து பணி செய்பவர். தமது செல்வம் எல்லாம் சிவனடியார் செல்வமே என்று கருதுபவர். சிவன் கோயில்களில் பூசை, விழா முதலியவற்றை இடைவிடாமல் செய்து இறைவழிபாட்டில் ஈடுபட்டவர்.

**திருக்கண்ணன்**

மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் என்பவன் கபிலர் பாடிய முள்ளூர் மலையில் இருந்துகொண்டு ஆண்ட குறுநில மன்னன். சிறந்த கொடையாளி. வளவனின் கொடி இவனது கோட்டையில் பறந்தது. சோழநாடு அரசன் இல்லாமல் வாடிய காலத்தில் அங்கு ஆட்சி நிலைபெற உதவியவன். இவன் மலையமான் திருமுடிக்காரியின் மகன் எனவும், தன் தந்தை காரி உதவியதை போலவே, இத்திருக்கண்ணனும் சோழன் கிள்ளிவளவனின் ஆட்சியை மீட்க கிள்ளிவளவனுக்கு உதவினான் எனவும் கருதுகின்றனர்.

**ஜம்பைக் கல்வெட்டு**

1981 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொல்லியல்துறை ஆய்வு மாணவர் ஒருவரால் இக் கல்வெட்டுக் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது தமிழ்நாடு தொல்லியல்துறை இயக்குனராக இருந்த ஆர். நாகசாமி இதனை ஆய்வு செய்து ஆங்கில நாளிதழ் ஒன்றில் கட்டுரையாக வெளியிட்டார். இக்கண்டுபிடிப்பு அண்மைக்காலக் கல்வெட்டுக் கண்டு பிடிப்புக்களுள் முக்கியமான கண்டுபிடிப்பாக இருந்தும் பல அறிஞர்கள் இதன் நம்பகத் தன்மை குறித்து ஐயுறவு கொண்டிருந்தனர். சங்ககாலத் தமிழ் இலக்கியமான புறநானூற்றில் பேசப்படுபவனும், தகடூர்த் தலைவனுமாகிய அதியமான் நெடுமானஞ்சி ஒரு குகை வாழிடத்தைத் தானமாகக் கொடுத்ததை இக் கல்வெட்டு அறிவிக்கின்றது. கல்வெட்டின் செய்தி: *ஸத்திய புத்திரன் அதியன் நெடுமான் அஞ்சி* என்பவர் தானமாகக் கொடுத்தே பாளி (சமணர் படுக்கை) சங்ககால அரசன் ஒருவனின் பெயர் கொண்ட கல்வெட்டுச் சான்று ஒன்று கிடைத்தது இக் கல்வெட்டின் ஒரு சிறப்பு. அத்துடன், அதியமான் இக் கல்வெட்டில் *"சதிய புத்தோ"* என்னும் அடை மொழியுடன் குறிப்பிடப்பட்டுள்ளான். இதன்மூலம் அசோகனின் கல்வெட்டொன்றில், சேர, சோழ, பாண்டியர்களுடன் "சதிய புத்தோ" எனக் குறிப்பிடப்பட்டுள்ள அரசகுலம் எது என்பது குறித்து நிலவிய விவாதங்களுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக அமைந்ததும் இதன் இன்னொரு சிறப்பு ஆகும்.

**கபிலர் குன்று**

திருக்கோவிலூரின் தென் பெண்ணையாற்றில் அமைந்துள்ள "கபிலர் குன்று" (கபிலக்கல்) என்னும் இடத்தில் கபிலர் உயிர்துறந்தார் என ஆராய்ச்சியாளர்கள் உறுதி செய்துள்ளனர். திருக்கோவிலூர் பேருந்து நிலையத்திலிருந்து இரண்டு கி.மீட்டரில் வீரட்டானேசுவரர் கோயிலின் அருகில் தென்பெண்ணையாற்றின் நடுவில் "கபிலர்குன்று"

உள்ளது. கபிலர்குன்று என இன்று அழைக்கப்பட்டாலும் "கபிலக்கல்" என்றே இந்த இடத்தைக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. கபிலர் குன்று அண்மைக் காலங்களில் "இடைச்சி குன்று" என்று அழைக்கப்பட்டது. இவ்விடம் தற்போது தமிழக அரசின் தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட இடமாகப் பராமரிக்கப்படுகிறது. கபிலர்குன்று என்பது தனித்த பாறையும் அதன்மேல் சிறுகோயில் அமைப்பில் கட்டப்பட்ட கட்டடமும் கொண்டது. கோயில் உள்ளே சிவலிங்கம் உள்ளது. செங்கல் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடத்தின் பழைமை மாறாமல் இன்று மெருகு ஊட்டப்பட்டு உள்ளது. கட்டட அமைப்பை கருத்தில் கொண்டு, கபிலர்குன்று பொ.ஊ. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டடபாணி எனத் தொல்லியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். கோயிலின் மேலே நான்கு பக்க மேல்பகுதிகளிலும் கடவுள் சிற்பங்கள் தெரிகின்றன. அச்சிலையின் மேல்பகுதியில் இரண்டு ஆண் உருவங்களும், இரண்டு பெண் உருவங்களும் தெரிகின்றன. பெண் உருவங்களின் முகம் பொலிவுடன் காணப்படுகின்றன. இப்பெண் உருவங்கள் அங்கவை, சங்கவையாகவும், ஆண் உருவம் அவர்களை மணந்தவர்களாகவும் கருத இடம் உண்டு. அல்லது பாரி, கபிலர் உருவங்கள் என்பதும் ஆராயப்பட வேண்டியுள்ளது. இவை மெருகு ஊட்டப்பட்டு உள்ளதால் எக்காலத்தைச் சார்ந்தவை எனக் கணக்கிட முடியவில்லை.

பறம்புமலையில் வாழ்ந்த கபிலர் பார்ப்பனர்களிடம் பாரிமகளிரை ஒப்படைத்துவிட்டு வடக்கிருந்து உயிர்விட்டார் என இலக்கியங்கள் குறிப்பிடும்பொழுது திருக்கோவிலூர் வீரட்டானேசுவரர் கோயிலின் கருவறையின் வடபுறச்சுவரில் உள்ள முதலாம் இராசராசசோழனின் காலத்துக் கல்வெட்டில்,"செஞ்சொற் கபிலன் மூரிவண் தடக்கைப் பாரிதன்னடைக்கலப் பெண்ணை மலையர்க்குதவி மினல்புகும் விசும்பின் வீடுபேறெண்ணி அந்தரிக்ஷம் செல கனல்புகும் பெண்ணை அலைபுனல் அழுவத்து கபிலக் கல்லது"எனும் தொடர்கள் இடம்பெற்றுள்ளன. சங்கப்பாடல் கபிலர் வடக்கிருந்து உயிர் நீத்தார் எனக் கூறும்போது, கல்வெட்டானது தீயில் இறங்கி உயிர் நீத்தார் என்கிறது. இக்கல்வெட்டில் இராசராசனின் தாய் வானவன் மாதேவி மலையமான் குலத்தில் தோன்றியவர் எனவும், மலையமான் குலத்திற்கு வீரட்டானேசுவரர் கோவில் குலதெய்வம் எனவும் அறிய முடிகிறது. அதுபோல் அக்கோயிலின் பெருமையைச் சொல்லும்பொழுது கோயிலின் அருகே உள்ள பெண்ணையாற்றில் உள்ள கபிலக்கல்லில் கபிலர் உயிர்நீத்தார் எனவும் கூறுகிறது. பாரிமகளிர் இருவரின் பெயர் அங்கவை, சங்கவை என்றும், அவர்கள் மழையில் நனைந்துகொண்டு வந்த ஔவையாருக்கு நீலச்சிற்றாடை வழங்கினார்கள் என்றும், ஔவையார் விநாயகனைக்கொண்டு எழுதிய ஓலையைச் சேர சோழ பாண்டியருக்கு அனுப்பி அவர்கள் அங்கவை சங்கவை திருமணத்துக்குச் சீர் கொண்டுவந்து தரத் திருமணம் திருக்கோவலூர் அரசன் தெய்வீகன் என்பவனோடு சிறப்பாக நடைபெற்றது என்றும், வெட்டிய பலாமரம் தழைத்துப் பழம் தந்தது என்பன போன்ற மாயவித்தைக் கதைகளுடன் கதை வளர்கிறது.

**திருக்கோவிலூர் வீரட்டேஸ்வரர் கோயில்**

திருக்கோவிலூர் வீரட்டேஸ்வரர் கோயில் அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவராலும் தேவாரம் பாடல் பெற்ற சிவத்தலமாகும். இச்சிவத்தலம் இந்தியா தமிழ்நாடு மாநிலத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள திருக்கோவிலூரில் கீழையூர் என்ற பகுதியில் அமைந்துள்ளது. இது தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் நடுநாட்டுத் தலங்களில் ஒன்றாகும்.மேலும் இது அட்டவீரட்டத் தலங்களில் ஒன்று ஆகும். இத் தலத்துக்கு ஞான சம்பந்தரும் அப்பரும் வந்து இந்த வீரட்டானரைப் பாடியிருக்கிறார்கள். கடையேழு வள்ளல்களில் ஒருவரான பாரியின் மகள்கள் அங்கவை, சங்கவை இருவருக்கும் அவ்வையும், கபிலரும் திருமணம் செய்து வைத்த தலம் இக்கோயிலில் மூலவர் லிங்கத் திருவுருவில் இருக்கிறார். இந்தக் கோயிலுக்குள்ளேயே செப்புச் சிலை வடிவில் அந்தகாசுர சம்ஹாரர் உள்ளார். அந்தகாசுரனைக் காலின் கீழ் போட்டு மிதித்துக்கொண்டு அவன் பேரில் சூலத்தைப் பாய்ச்சுகின்ற நிலையில் இருக்கிறார். இது அழகான நல்ல சோழர் காலத்துச் செப்புப் படிமம் ஆகும். அம்மையின் கோயில், வீரட்டேசுரர் கோயிலுக்கு இடப்புறம் தனித்ததொரு கோயிலாக மேற்கு நோக்கி இருக்கிறது.

**முடிவுரை**

ஆதிச்சநூர் என்ற இடத்தில் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட கற்பதுக்கைகள் கிடைக்கிறது. தமிழ்நாட்டின் வரலாற்றில் திருக்கோவிலூர் ஒரு தனிச்சிறப்பை பெற்ற பகுதியாகும் கற்காலம் முதல் சோழ மன்னர்களின் ஆட்சி காலத்திலும் பிறகு பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலத்திலும் பல வரலாற்று பதிவுகள் திருக்கோவிலூரில் ஏராளமாக கிடைக்கின்றன. அகநானூற்றுப் பாடலில் துஞ்சா முழுவிற் கோவல் என்றும் புறநானூற்றில் முரண்மிகு

கோவலூர் என்றும் குறிப்பிட்ட இந்தப் பகுதி கோவில் கல்வெட்டில் படிக்கும் பொழுது திருக்கோவிலூர் என்றே பொறிக்கப்பட்டுள்ளது. அழகிய கோவில்கள் நிறைந்த இந்த ஊர் வரலாற்றில் அதி முக்கியத்துவம் வாய்ந்தது என்று வரலாற்று ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். இந்திய வரலாற்றில் சோழர்கள் வம்சம் நீண்ட காலம் புகழ்பெற்று இருந்ததற்கும் தற்பொழுது பேசப்பட்டு வருவதற்கும் மிக முக்கிய காரணமே இந்த திருக்கோவிலூர் தான். மலையமான்கள் ஆண்ட இந்த பகுதியில் திருக்கோவிலூரை ஆண்ட மலையமானின் மகளாகப் பிறந்த வானவன் மாதேவி தான், தஞ்சை பெருவுடையார் கோயில் எனும் அதிசயத்தை இன்றளவிலும் தலை நிமிர்ந்து பார்க்கும் படி செய்த ராஜ ராஜ சோழனின் தாயார் திருக்கோவிலூர் ஆட்சி செய்த மலையமான்கள் வம்சத்தை சார்ந்தவர் திருக்கோவிலூர் பகுதியில் கிடைக்கும் கல்வெட்டுக்கள் ராஜராஜ சோழனின் வாழ்க்கை வரலாற்றுக்கு பெரிதும் ஆதாரமாக இருக்கின்றன ராஜராஜ சோழ மன்னனின் ஆரம்பகால வாழ்க்கை பற்றிய குறிப்புகள் இந்த பகுதியில் கல்வெட்டுக்களாக கிடைக்கிறது.

**ஆதாரங்கள்**


1. பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும் பவுன்துரை, இராசு. சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் , 2004.
2. புலவர் சுந்தர சண்முகனார் (1993). "கெடிலக் கரை நாகரிகம்" நூல் (மெய்யப்பன் தமிழாய்வகம்): p. 290-292.
3. அம்மூவனார் பாடல் அகநானூறு 35-14.
4. 63 நாயன்மார்கள், தொகுப்பாசிரியர் மெய்ப்பொருள் நாயனார் தினமலர் நாளிதழ்
5. புறநானூறு 174.
6. "ஜம்பை கல்வெட்டு" தமிழ் இணையக் கல்விக்கழகம்
7. புறம் 236, அடிக்குறிப்பு
8. தெ.இ.க. தொகுதி 7, 863.
9. பு.மா.ஜெயசெந்தில்நாதன், திருமுறைத்தலங்கள், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2009.


*****